www.Padasalai.Net www.TrbTnpsc.com

வகுப்பு : 11

தேர்வு எண்

# அரையாண்டுப் பொதுத் தேர்வு - 2024 -25

## கணிப்பொறி அறிவியல்

நேரம் : 3.00 மணி] [மொத்த மதிப்பெண்கள் : 70

பகுதி – I

குறிப்பு (i) அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். 15x1=15

(ii) கொடுக்கப்பட்டுள்ள நான்கு விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையைத் தேர்ந்தெடுத்து குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதுக.

1. ஒரு கணிப்பொறி மீண்டும் தொடங்கும் போது எந்த வகையான தொடங்குதலைப் பயன்படுத்துகிறது.
அ) உடன் தொடக்கம் ஆ) தண் தொடக்கம் இ) தொடு தொடக்கம் ஈ) மெய் தொடக்கம்
2. $(24)_{10}$ என்ற பதின்ம எண்ணின் இருநிலை எண் யாது?
அ) 00110000 ஆ) 00010100 இ) 00011000 ஈ) 00010010
3. கணிப்பொறியின் திரைச்சாதனத்தை இணைக்க உதவும் தொடர்பு சாதனம் எது?
அ) USB ஆ) Ps/2 இ) SCSI ஈ) VGA
4. பின்வரும் எது, இயக்க அமைப்பு செயல்பாடு அல்ல?
அ) செயல்முறை மேலாண்மை ஆ) நினைவக மேலாண்மை
இ) பாதுகாப்பு மேலாண்மை ஈ) நிரல் பெயர்ப்பி சூழல்
5. கீழே கொடுக்கப்பட்டுள்ளவற்றுள் இயக்க அமைப்பு நிர்வகிக்கும் செயல்களைத் தேர்வு செய்யவும்
அ) நினைவகம் ஆ) செயலி இ) I/O சாதனங்கள் ஈ) இவை அனைத்தும்
6. உள்ளீட்டு பண்பு மற்றும் உள்ளீடு–வெளியீடு தொடர்பை ஒரு சிக்கலில் குறிப்பிடுவதை இவ்வாறு அழைக்கலாம்
அ) விவரக்குறிப்பு ஆ) கூற்றுக்கள் இ) நெறிமுறை ஈ) வரையறை
7. கீழே கொடுக்கப்பட்டுள்ளவைகளில் எது m , n: =m+2, n+3 என்ற மதிப்பிலிருத்தலின் மாற்றமிலி இல்லை?
அ) m mod 2 ஆ) n mod 3 இ) 3 x m-2 x n ஈ) 2xm - 3 x n
8. கீழே கொடுக்கப்பட்டவைகளில் எது ஒரு சரியான சரநிலையுரு ஆகும்?
அ) 'A' ஆ) 'Welcome' இ) 1232 ஈ) "1232"
9. for (int i = 0; i <10; i++) என்ற மடக்கு எத்தனை முறை இயங்கும்?
அ) 0 ஆ) 10 இ) 9 ஈ) 11
10. இவற்றுள் எந்த செயற்கூறு ஒரு மதிப்பைத் திருப்பி அனுப்பி மற்றும் செயலுருபுகளை ஏற்காத செயற்கூறு ஆகும்?
அ) x= display(int, int) ஆ) x= display() இ) y= display(float) ஈ) display(int)
11. int age [] = {3,90,20,18,23} இந்த அணியில் age [3]; என்ற கூற்று எந்த எண்ணைக் குறிக்கும்?
அ) 3 ஆ) 90 இ) 20 ஈ) 18
12. இனக்குழுவுக்குள் வரையறுக்கப்படும் செயற்கூறுகள் எந்த செயற்கூறுகளைப் போல் இயங்குகின்றன?
அ) inline செயற்கூறுகள் ஆ) inline அல்லாத செயற்கூறுகள்
இ) Outline செயற்கூறுகள் ஈ) தரவு செயற்கூறு
13. பின்வருவனவற்றுள் எது செயற்கூறுகளுக்கு வேறுபட்ட பொருள் உள்ளதை குறிக்கிறது?
அ) செயற்கூறு பணிமிகுப்பு ஆ) உறுப்பு பணிமிகுப்பு
இ) செயற்குறி பணிமிகுப்பு ஈ) செயற்பாடு பணிமிகுப்பு
14. பின்வருவனவற்றுள் எது மரபுரிமம் பெற்ற வரிசையில் இயக்கப்படுகிறது?
அ) அழிப்பி ஆ) உறுப்பு செயற்கூறு இ) ஆக்கி ஈ) பொருள்
15. தேவையற்ற மின்னஞ்சல் அடுத்தவர்களுக்கு பரிமாற்றம் செய்தல்,
அ) ஊழல் ஆ) ஸ்பேம்–மின்னஞ்சல் குப்பைகள்
இ) மோசடி ஈ) ஸ்பூபிங் (சுருளாக்கம்)

பகுதி – II

**II. ஏதேனும் 6 வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும். வினா எண்.24 கட்டாய வினா. 6x2=12**

16. மையச்செயலகத்தின் CPU பகுதிகள் யாவை?
17. 1 ன் நிரப்பு முறைக்கான வழிமுறைகளை எழுதுக.
18. கணிப்பொறியில் பயன்படுத்தப்படும் வெவ்வேறு இயக்க அமைப்புகள் யாவை?
19. ஒரு நிபந்தனை மற்றும் கூற்று – வேறுபடுத்துக.
20. மடக்கு மாற்றமிலியை வரையறுக்கவும்.
21. if கூற்றுடன், ?: மும்ம செயற்குறியை ஒப்பிடுக.
22. சரங்கள் என்றால் என்ன?
23. தமிழில் சேவைகளை வழங்கி வரும் தேடுபொறிகளை பட்டியலிடுக.
24. a = 15; எனில் a>>2; ன் விடை என்ன?

பகுதி – III

**III. ஏதேனும் 6 வினாக்களுக்கு மட்டும் விடையளிக்க. வினா எண் 33 கட்டாய வினா. 6x3=18**

25. டிமார்கன் தேற்றங்களை எழுதுக.
26. ஃபிளாஷ் நினைவகம் மற்றும் EPROM எவ்வாறு வேறுபடுத்துவாய்?
27. விண்டோஸ் சன்னல் திரைக் கூறுகளைப் பற்றி குறிப்பு வரைக.
28. Case பகுப்பாய்வு என்றால் என்ன?



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

29. C++ ல் கணக்கீட்டுச் செயற்குறிகள் யாவை? ஒரும, இரும செயற்குறிகளை எடுத்துக்காட்டுடன் வேறுபடுத்துக.
30. தகவல் மறைப்பு – வரையறு.
31. செயற்குறி பணிமிகுப்பு என்றால் என்ன? பணிமிகுப்பு செய்யக்கூடிய செயற்குறிகளுள் சிலவற்றை கூறு.
32. பையர்வாலின் பங்கு பற்றி எழுதுக.
33. Struct () மற்றும் Strupr () செயற்கூறுகளின் வேறுபாடுகள் யாவை?

பகுதி – IV

IV. அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். 5×5=25

34. அ) கணிப்பொறியின் அடிப்படைப் பாகங்களைத் தெளிவான விளக்கப்படத்துடன் விளக்கு.

(அல்லது)

ஆ) இயக்க நேரத்தின் அடிப்படையில் நினைவக சாதனங்களை ஏறுவரிசையில் அமைக்கவும்.

35. அ) விண்டோஸ் இயக்க அமைப்பில் குறுக்கு வழி பணிக்குறிகளை உருவாக்கும் செயல்முறையை விளக்குக.

(அல்லது)

ஆ) மரபுரிமத்தின் பல்வேறு வகைகளை விவரி.

36. அ) C++ ல் கணக்கீட்டுச் செயற்குறிகள் யாவை? ஒரும, இரும செயற்குறிகளை எடுத்துக்காட்டுடன் வேறுபடுத்துக.

(அல்லது)

ஆ) நுழைவு சோதிப்பு மடக்கு என்றால் என்ன? ஏதேனும் ஒரு நுழைவு சோதிப்பு மடக்கை பொருத்தமான எடுத்துக்காட்டுடன் விளக்குக.

37. அ) செயற்கூறு மதிப்பை திருப்பி அனுப்பும் பல்வேறு வடிவங்களை எடுத்துக்காட்டுடன் விளக்குக

(அல்லது)

ஆ) பொருள் நோக்கு நிரலாக்கத்தின் நன்மைகள் யாவை?

38. அ) கீழ்க்காணும் நிரலுக்கு வெளியீடு எழுதுக.

(அல்லது)

```
#include<iostream>
    using namespace std;
    class student
    {
       int rno, marks;
        public:
       student(int r,int m)
    {
       cout<<"Constructor "<<endl;
       rno=r;
       marks=m;
    }
    void printdet()
    {
      marks=marks+30;
      cout<<"Name: KANNAN"<<endl;
       out<<"Roll no : "<<rno<<"\n";
      cout<<"Marks : "<<marks<<endl;
    }
    };
       int main()
    {
      student s(25,99);
      s.printdet();
      cout<< "Back to Main";
      return 0;
    }
```

(அல்லது)

ஆ) ஒரு நெறிமுறையில் கர்ணம் (hypotunse) பற்றிய விவரக்குறிப்புகளை எழுதுங்கள், வலது கோண முக்கோணத்தின் இரண்டு குறைந்த பக்கததையும், மற்றும் வெளியீடு நீளம் மூன்றாம் பக்கத்தையும் காண்க.

KK / M/11 / C.S / 2